# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2392/47 - 2024 ජූලි මස 11 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.07.11

*2392/47 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு யூலை மாதம் 11 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

25அ என்னும் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்பட வேண்டிய 27(1) (ஆ) என்னும் பிரிவின் கீழான கட்டளை

1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழங்கள் சட்டத்தின் 25அ என்னும் பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்பட வேண்டிய 27(1)(ஆ) என்னும் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக்கொண்டு, கல்வி அமைச்சர் கலாநிதி ஏ. டி. சுசில் பிரேமஜயந்த ஆகிய நான், 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றாகவுள்ளதும், பட்டத்தை அளிக்கின்ற நிறுவகமொன்றாக ஏற்றங்கீகரிக்கப்பட்ட PB 4833 ஆம் பதிவிலக்கத்தைக் கொண்டதும் மஹேரன்வத்த, பிட்டிபன, ஹோமாகமவில் அமைந்துள்ளதுமான நஷனல் ஸ்கூல் ஒப் பிஸினஸ் மெனேஜ்மன்ட் லிமிட்டெட் தொடர்பில், மேற்கூறப்பட்ட சட்டத்தின் 70இ என்னும் பிரிவின் கீழான அறிக்கையொன்றைப் பெற்றுக்கொண்டு, சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்டதும், 2024, மே 08 ஆந் திகதிய 2383/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளைக்கான II ஆம் அட்டவணையை அதற்கான நிரல் I இல் காணப்படும் "கல்வி முகாமைத்துவம் மற்றும் தலைமைத்துவத்தில் கல்வி முதுமாணி" என்னும் பதிவையும் நிரல் II இலுள்ள அதன் நேரொத்த பதிவையும் உடனடுத்து, அதற்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகளுக்கமைவாக இதற்கான அட்டவணை II இன் முறையே நிரல் I இன் கீழும் நிரல் II இன் கீழும் குறித்துரைக்கப்பட்ட பதிவுகளைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையினால் திருத்துகின்றேன்.

**அட்டவணை I**

நிபந்தனைகள்

1. நஷனல் ஸ்கூல் ஒப் பிஸினஸ் மெனேஜ்மன்ட் லிமிட்டெட் ஆனது, குறைந்தபட்சம் 30 திறமை மதிப்பீடுகளுடன் தகவல் தொழில்நுட்பவியல் முதுமாணி (இலங்கை தகைமை கட்டமைப்பு மட்டம் 9) மற்றும் குறைந்தபட்சம் 60 திறமை மதிப்பீடுகளுடன் தகவல் தொழில்நுட்பவியலில் விஞ்ஞான முதுமாணி (இலங்கை தகைமை கட்டமைப்பு மட்டம் 10) தொடர்பில் இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்ட நிகழ்ச்சித் திட்டத்துக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளும்போது, பின்வரும் குறைந்தபட்ச நுழைவுத் தகைமைகளுக்கு அமைந்தொழுகுதல் வேண்டும் :

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அல்லது பட்டப்பின் நிகழ்ச்சித் திட்டங்களுக்கான கற்கைகள் சபைக்கு ஏற்புடையதற்பாலதான குறைந்தபட்சம் ஒரு வருட இயைபான தொழில் அனுபவத்துடன் இலங்கையில் உயர்கல்வி எனும் விடயத்துக்கு பொறுப்பாகவுள்ள அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சிறப்புப் பட்டமொன்று ;

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அல்லது பட்டப்பின் நிகழ்ச்சித் திட்டங்களுக்கான கற்கைகள் சபைக்கு ஏற்புடையதற்பாலதான குறைந்தபட்சம் இரண்டு வருட இயைபான தொழில் அனுபவத்துடன் இலங்கையில் உயர்கல்வி எனும் விடயத்துக்கு பொறுப்பாகவுள்ள அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டமொன்று ;

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அல்லது இலங்கையின் உயர்கல்வி எனும் விடயத்துக்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் பட்டப்பின் நிகழ்ச்சித் திட்டங்களுக்கான கற்கைகள் சபைக்கு ஏற்புடையதற்பாலதான நிறுவகமொன்றிலான குறைந்தபட்சம் இரண்டு வருட இயைபான அனுபவத்துடனான பட்டப்பின் டிப்ளோமாவொன்று ;

(ஈ) பட்டப்பின் பட்டங்களுக்கான நுழைவுத் தகைமையாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் அங்கீகரிக்கப்பட்ட உயர் தொழில்சார் தகைமை.

2. நஷனல் ஸ்கூல் ஒப் பிஸினஸ் மெனேஜ்மன்ட் லிமிட்டெட் ஆனது, குறித்துரைக்கப்பட்ட அதிகாரியினால் நடாத்தப்படும் ஐந்து (5) ஆண்டு மீள் மீளாய்வுக்கு அமைய இதற்கான அட்டவணை II இல் குறித்துரைக்கப்பட்ட பட்டத்தை வழங்குவதற்கு ஏற்றங்கீகரிக்கப்படுதல் வேண்டும்.

## அட்டவணை II

| நிரல் I<br><br>பட்டம் | நிரல் II<br><br>பட்டத்துக்கான சுருக்கீடு |
|---|---|
| தகவல் தொழில்நுட்பவியல் முதுமாணி | எம்ஐரி |
| தகவல் தொழில்நுட்பவியலில் விஞ்ஞான முதுமாணி | எம்எஸ்சி (ஐரி) |

கலாநிதி **ஏ. டி. சுசில் பிரேமஜயந்த,**
கல்வி அமைச்சர்.

கொழும்பு,
*2024, யூலை 04.*

EOG *07-0104*